CHURCH OF BODY OF LORD JESUS CHRIST
ATHUMANESAR
UNITED CHRISTIANS BELIEVERS FELLOWSHIP


ஆத்துமநேசர் நமது இயேசு

Athumanesar NamathuYesu

Price: Rs.5/-    Annual Subs:Rs.50/-

Volume:13    June - 2025    Issue: 03


# பயப்படாதே! கவலைப்படாதே! தைரியமாய் ஸ்தோத்திரம் சொல்லு

## கர்த்தரின் சேனையாய் எழுந்திருப்போம்; ஜெயம் பெறுவோம்

## கர்த்தருடைய நாமத்தினால் ஜெயம் பெறும் தேவ சேனையாவோம்

## பரம சேனையின் திரள் நம்மை ஆசீர்வதிக்கும்

## எல்லா ஆசீர்வாதங்களும் இனி நிச்சயம் கிடைக்கும்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை    கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி

## ஆசிரியர் கடிதம்

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும் தேவனுடைய சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய ஆசீர்வாதம் எழுதுவது... ✍

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆத்துமநேசராம் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக.

அன்பான வாசகர்களே! இதை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்காகவும் நாங்கள் தனித்தும் குடும்பமாகவும் சேர்ந்தும் சபையாகவும் மிகவும் பாரத்துடன் ஜெபிக்கின்றோம். இந்தப் புத்தகத்தை உங்கள் கையில் கிடைக்கச் செய்தவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஒரு பெரிய நோக்கத்துடன் உங்களிடத்தில் கர்த்தர் வந்திருக்கிறார். விசுவாசத்துடனும் மன உறுதியுடனும் ஜெபத்துடனும் எதிர் பார்த்தலுடனும் படியுங்கள். உங்களுடைய வேதனைகள் எதுவாக இருந்தாலும் இன்றைக்கே இன்றிலிருந்தே ஓங்களை விட்டு உங்கள் குடும்பங்களை விட்டு நீங்கிப் போய்விடும். நீங்கள் விரும்புகிற எல்லா நன்மையான காரியங்களும் இனி நிச்சயம் நமக்குக் கிடைக்கும். தேவ கிருபையினாலும் உங்கள் எல்லாருடைய ஜெபத்தினாலும் உதவியினாலும் சபையும் ஊழியமும் மிகவும் பலுகிப் பெருகி வளர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையும் உத்தமுமான ஊழியர்களையும் விசுவாசிகளையும் கர்த்தர் எழுப்பிக் கொண்டிருக்கிறார். விரோதம் பண்ணுகிறவர்கள் பண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கர்த்தர் தாமே அவர்களைச் சந்திக்கவும் சரியான மனந்திரும்புதலுக்காகவும் ஜெபியுங்கள். 1தெசலோனிகேயர் 3:6 முதல் 10ம் வசனம் வரை சொல்லியிருக்கிறபடி, விசுவாசம், அன்பு, ஊழியர்களை எப்பொழுதும் பட்சமாய் நினைத்தல், தேவ பிள்ளைகளைக் காண வாஞ்சித்தல் இப்படிப்பட்ட நல்ல அனுபவங்களுடன் இனி செயல்படுவோம். இந்த நல்ல அனுபவங்களுடன் உண்மையான தேவ பிள்ளைகளை பார்க்கும் போதே விசுவாச குறைவு நீங்கும். எல்லா ஆசீர்வாதங்களையும் பெறுவோம். நாம் இனி அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்போம். கர்த்தர் தாமே உங்களை சங்கீதம் 40வது அதிகாரத்தின்படி தூக்கி எடுப்பாராக. நம் மூலம் அநேகர் கர்த்தரை நம்பி ஆசீர்வதிக்கப்படுவார்களாக. கர்த்தர் தாமே நம்மையும் ஏசாயா40, 41, 42, 43, 44, 45 அதிகாரத்திலுள்ள எல்லா நன்மைகளினாலும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இரவும் பகலும் உங்களுக்காக கண்ணீருடன் ஜெபிக்கும்
தேவனுடைய பிள்ளை, D.ஆசீர்வாதம்

## கர்த்தரின் செய்தி

# பயப்படாதே! கவலைப்படாதே! தைரியமாய் ஸ்தோத்திரம் சொல்லு எல்லா ஆசீர்வாதங்களும் இனி நிச்சயம் கிடைக்கும்

**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்;அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 16:8**

*கர்த்தரை எப்பொழுதும் நமக்கு துணையாக வைத்துக் கொள்ள வேண்டும்.* 1) கர்த்தர் நம் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் யாரும் எதுவும் நம்மை அசைக்க முடியாது அசைக்கப்படுவதில்லை. அப்பொழுது யாரும் எதுவும் நம்மை அசைக்க முடியாது. 2)அப்பொழுது நமக்கு கர்த்தர் மேல் நம்பிக்கை வந்து விடும். செழிப்பாவோம். காப்பாற்றப்படுவோம். தீங்கு நீங்கி விடும், இனி வராது. 3) நம் செல்வம் நமக்கு வேண்டியதாய் இராமல் பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் முழு பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும் வேண்டியதாயிருக்கிறது என்று சொல்லுவோம். கொடுப்போம். நன்மையும் கிருபையும் நம்மை தொடரும். மகா பெரிய அளவில் நமக்குத் தேவையான எல்லாம் தொடரும். நம் சுதந்திரம் கிடைக்கும். 4)வேதனைகள் வராது. 5)கர்த்தர் நமக்கு பங்காக இருப்பார். 6)நமது சுதந்திரம் கர்த்தரால் காக்கப்படும். 7)நேர்த்தியான இடத்தில் பங்கு கிடைக்கும். 8) சிறப்பான சுதந்திரம் கிடைக்கும். 9) தேவ ஆலோசனை எல்லா காரியங்களிலும் நமக்கு கிடைத்து அதன்படி செய்து ஆசீர்வாதம் பெறுவோம். 10) துதித்து துதித்து சங்கீதம் 75ன்படி, நாமத்தை முக்கியப்படுத்துவோம். 11)அதிசயமான கிரியைகளை அனுபவிப்போம். 12)நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவோம். 13)பூமியில் அழிவு வரும். நாமோ தூண்களாக நிறுத்தப்பட்டு பாக்கியமும் எல்லா ஆசீர்வாதமும் பெறுவோம். 14)உண்மையுள்ள இருதயம் கிடைக்கும் 15) நம் இருதயம் பூரித்து மகிழும். பாக்கியம் கிடைக்கும். 16) வலது பக்க அனுபவம் கிடைக்கும். நம் பின்னிலைமை பெரிய அளவில் செழிப்பாகும். கடன் வாங்க மாட்டோம். கடன் கொடுப்போம். நம்மை யாரும் ஆள முடியாது. நாம் ஆளுகை செய்வோம். 17) தேவ பிள்ளைகள் சிலரோடு ஐக்கியப்பட்டு களிகூறும் தேவ மகிமை கிடைக்கும். 18) தீர்க்காயுசு கிடைக்கும் 19) ஜீவ மார்க்கம் என்ற இயேசுவின் வழியில் வருவோம். இயேசுவால் கிடைக்கும் இரட்சிப் பும், சுகமும், பெலனும் கிடைக்கும். 20) தேவ சமூகம் நம் முன்னே செல்லும். 21) பரிபூரண ஆனந்தம் கிடைக்கும். 22) வலது பாரிச அனுபவங்களைச் செய்வோம். நித்திய பேரின்பமும் கிடைக்கும். *கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்துக் கொண்டால் அவர் நம்மை எப்படியெல்லாம் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதைப் பார்ப்போம்.*

**முதலாவது** ஆதியாகமம் 2:15ன்படி, நாம் தங்கும் இடத்தையும் அந்த இடத்தைச் சுற்றி பண்படுத்தவும் காக்கவும் கனி புசிக்க **வைக்கக்** கிருபை செய்வார். நம்மை நாமே பண்படுத்தவும், நம்மை காக்கவும் கலாத்தியர் 5:22ன்படி, கனி கொடுக்கும் பாக்கியத்தையும் பெறுவோம். உண்மையாக செய்தால் ஆதியாகமம் 26:12ன்படி, நூறு மடங்கு பலனைப் பெறுவோம். வர வர விருத்தியடைந்து மகா பெரியவர்களாகி விடுவோம். **இரண்டாவது** யாத்திராகமம் 14:31ன்படி, கர்த்தர் நம்மை சாட்சியாக **வைத்து** உயர்த்துவார். அநேகருக்கு பிரயோஜனமாக்குவார். எல்லாவற்றிலும் எல்லாருக்கும் சாட்சியாக இருக்க **வைப்பார்**. **மூன்றாவது** சங்கீதம் 2:6ன்படி, ராஜாவாக சுத்திகரிக்கப் பெற்று இராஜாக்களாக ஆளுகை செய்கிறவர்களாக **வைப்பார்**. **நான்காவது** 1 கொரிந்தியர் 4:6ன்படி, திருஷ்டாந்தமாக மகா முன்மாதிரியாக ஊழியர்களுக்கும், மூப்பர்களுக்கும் விசுவாசிகளுக்கும், உலக மனுஷருக்கும் பெரிய மாதிரியாக இருந்து பேர் பெற **வைப்பார்**. **ஐந்தாவது** யோசுவா 2:3ன்படி, ராகாப் தன் வீட்டின் ஜன்னலில் சிவப்பு தொங்க **வைத்து** அழிவிலிருந்து தப்பினது போல நாமும் நம் வீட்டிலும், தேவனுடைய வீட்டிலும் சிவப்பு நூலாக பொறுப்பில் உண்மையாக **வைக்கப்பட்டு** செயல்பட வேண்டும். அப்பொழுது ராகாப் என்பவள் காக்கப்பட்டு உயர்த்தப்பட்டது போல அவள் வழியாக ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி உருவானதைப் போல நாமும் காக்கப்படுவோம். உயர்த்தப்படுவோம். ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி நம்மூலம் எழும்பும். தாவீதை போல ஆளுகை செய்கிறவர்கள் எழும்புவார்கள். மத்தேயு 1:5 முதல் 16 வசனம் வரை படிக்கவும். **ஆறாவது** மத்தேயு 5:15ன்படி, விளக்குத் தண்டின் மேல் **வைக்கப்பட்டு** எரிகிற விளக்கை போல கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கில் நற்கிரியை யில் பொறுப்புகளில் நமக்கும் அநேகருக்கும் பிரயோஜனமான நற்கிரியை செய்து பிரகாசிப்போம். வேதனை நீங்கி ஆசீர்வதிக்கப் படுவோம். **ஏழாவது** லூக்கா 19:17ன்படி, கொஞ்சத்தில் உண்மையாயிருந்து அநேகத்தில் அதிகாரியாக வைக்கப்பட்டு செயல்படுவோம். **எட்டாவது** யோவான் 14:27ன்படி, இயேசு கிறிஸ்து நமக்கு **வைத்திருக்கிற**

சமாதானத்தைப் பெற்று, **கொலோசெயர் 3:16ன்படி** தேவ சமாதானம் நம் இருதயங்களை ஆண்டு இயேசு கிறிஸ்துவின் ஒரே சரீரமாகி நன்றியறிதல் உள்ளவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை **வைத்**திருக்கிற ஸ்தானத்தில் உண்மையும் உத்தமுமாக எல்லா வேதனைகளும் நீங்கி எல்லா ஆசீர்வாதங்களையும் பெற கிருபை செய்வாராக. இதற்காக முழுமையாக இயேசுவுக்கு ஒப்பு கொடுங்கள்; பரிசுத்த ஆவியானவருக்கு முழுமையாக அர்ப்பணியுங்கள். ஜெபியுங்கள். இப்போதே தேவ வல்லமை உங்களில் இறங்கி கொண்டே இருக்கிறது. ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லி கொண்டே நிரப்பப்படுங்கள்.

கர்த்தரை நமக்கு முன்பாக **வைத்**துக் கொண்டால் 22 ஆசீர்வாதங்களோடு தேவன் மனிதனுக்கு முன்பு **வைத்**திருக்கிற எல்லாமே கிடைக்கும். எந்த இடம் என்பதைப் பார்த்து, நாமும் அப்படியே வாழுவோம். குறைவில்லாமல் நாம் நிறைவோடு வாழ்வோம்.

## கர்த்தரின் சேனையாய் எழுந்திருப்போம்; ஜெயம் பெறுவோம்.

**கர்த்தருக்கு பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்தரியுங்கள். சங்கீதம் 103:21**

அன்பான தேவனுடைய பிள்ளைகளே! நமக்கு பிரியமானதை செய்து, மனுஷருக்கு பிரியமானதை செய்து தேவன் மனுஷனுக்கு வைத்து வைத்திருக்கிற சமாதானத்தை இழந்திருக்கிறோம். உண்மையான சமாதானமில்லாமல் மாயமான சமாதானத்தினால் மக்கள் நிறைந்திருக்கிறார்கள். ஆகவே பலவித வேதனைகள், சோதனைகள், வியாதிகள், தோல்விகள், மனம் புண்படும் காரியங்கள், சரீரம் புண்படும் காரியங்கள், நமக்கு ஏற்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறோம். இதைப் படிக்கிற தேவ பிள்ளைகளே! இனி நாம் அப்படி இருக்க வேண்டாம். கர்த்தருக்கு பிரியமானதை செய்து அவர் பணிவிடைக்காரர்களாக இருப்போம். ஆசீர்வதிக்கப்பட்டு அவருடைய சர்வ சேனைகளாக மாறுவோம். அவரை ஸ்தோத்தரிப்போம். அவருடைய ஆளுகைக்குள்ளிருந்து அவருடை ய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுவோம். நமக்கு

தேவையான எல்லா நன்மையான ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

## யாக்கோபை போல தேவ சேனையை சந்தித்து ஜெயம் பெறுவோம்

**யாக்கோபு அவர்களைக் கண்டபோது இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான். ஆதியாகமம் 32:2**

*யாக்கோபு அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கீழ்ப்படிந்து, அவர்கள் சொல்லும் இடத்திற்கு ரெபேக்காளுடைய தம்பி லாபான் வீட்டிற்கு சென்றான். அங்கே சுறுசுறுப்புடன் இரவும் பகலும் வேலை செய்தான். இரு பரிவாரங்களாகிய ஆடுகளைப் பெற்றான். லாபானுடைய குமாரர் எங்கள் தகப்பனுக்கு உண்டான யாவையும் யாக்கோபு எடுத்துக் கொண்டான். எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்த செல்வத்தை எல்லாம் அடைந்தான் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்டான். லாபானுடைய முகத்தை யாக்கோபு பார்த்தபோது அது நேற்று முந்தைய நாள் இருந்தது போல இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான். கர்த்தர் யாக்கோபை நோக்கி பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாருக்கும் நீ திரும்பி போ, நான் உன்னோடே கூட இருப்பேன் என்றார். யாக்கோபு பிரயாணம் பண்ணுகையில் தேவ தூதர்கள் அவனை சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்ட போது இது தேவனுடைய சேனை என்று சொல்லி அவன் அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான். தொடர்ந்து தேவ தூதர்களாகிய தேவ சேனை அவனை வழிநடத்தி எல்லா ஆசீர்வாதங்களையும் தொடர்ந்து பெற* **வைத்தது**. *அது போல நாமும் கர்த்தரை உயர்த்தாமல் தங்களை உயர்த்துகிறவர்களை விட்டு விலக வேண்டும். முக நாடி மாறி மாறி செயல்பட்டு பேசுகிறவர்களை விட்டும் விலக வேண்டும். விலகி நமக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற பொறுப்பில் கர்த்தரோடும், நம்மை பெற்றெடுத்த வழிநடத்துகிற மேய்ப்பனோடும், சபையோடும் சேர்ந்து தேவன்* **வை***த்திருக்கிற பொறுப்பில் இருந்து ஆசீர்வதிக்கப்படுவோம்.*

## கர்த்தருடைய நாமத்தினால் ஜெயம் பெறும் தேவ சேனையாவோம்

**...நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். 1சாமுவேல் 17:45**

**...சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்;...**

**ஏசாயா 54:5**

தேவனுடைய நாமத்தை முக்கியப்படுத்தி, எதைச் செய்தாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்து பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம். இராஜாக்களாக மாறுவோம். கோலியாத்தைப் போன்ற எதிரிகளை முறியடிக்க, பேய்களை நோய்களை, கடன் தொல்லைகளை முறியடிக்க தாவீதை போல தகப்பன் கொடுக்கும் பொறுப்பில் உண்மையாயிருப்போம். தகப்பனுக்கு கீழ்ப்படிந்து ஓட்டமாய் ஓடி சகோதருக்களுக்கு உதவி செய்தது போல நாமும் செயல்படுவோம். கர்த்தரை நிந்திக்கிற கர்த்தருடைய பிள்ளைகளை துச்சமாக எண்ணுகிற நம்மையும் கர்த்தருடைய பிள்ளைகளையும் நிந்திக்கிற எதிர்சக்திகளையும் எதிர்த்து செயல்படுவோம். ஓடி கையில் வைத்திருந்த கூழாங்கல்லை உபயோகித்து கோலியாத்தை அழித்து சத்துருக்களை முறியடித்தது போல நாமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சத்துருக்களை அழித்து முறியடிப்போம். ஜெபத்தோடு ராஜாக்களாக உயர்த்தப்பட்டு ஆளுகை செய்வோம்.

## தாவீதுக்கு உதவி செய்பவர்கள் மூலம் மகா சேனையாவோம்.

**அக்காலத்திலே நாளுக்குநாள் தாவீதுக்கு உதவி செய்யும் மனுஷர் அவனிடம் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவ சேனையைப் போல மகா சேனையானார்கள்.**

**1 நாளாகமம் 12:22**

தாவீது கர்த்தருடைய அபிஷேகத்தோடு இருந்தபடியால் வர வர விருத்தியடைந்தான். அவனோடு உதவி செய்யும்படி தேவ சேனை போல மகா சேனையானார்கள். அவனுக்கு நாமும் அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வைராக்கியமாக இருக்கிற தேவ ஊழியர்களுக்கும் போதகர்களுக்கு, உண்மையான உதவி போதகர்களுக்கும்,

உண்மையான மூப்பர்களுக்கும், உண்மையான விசுவாசிகளுக்கும் தேவையான எல்லாருக்கும் உதவி செய்து அவர்களோடு தேவ சேனையைப் போல மகா சேனையாவோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற மகாராஜாவின் ஆளுகைக்குள் **வைக்கப்பட்டு** நடத்தப்படுவோம். அவருடைய ராஜ்யத்தையும் நீதியையும் தொடர்ந்து **மத்தேயு 6:33ன்படி,** இனி தேடுவோம். தேவையான எல்லாம் கூட பெறுவோம்.

## <u>உலர்ந்த எலும்புகள் கர்த்தரின் ஆவியால் மகா பெரிய சேனையாகும்</u>

**எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க,அவர்கள் உயிரடைந்து, காலூன்றி மகா பெரிய சேனையாய் நின்றார்கள். எசேக்கியேல் 37:10**

தீர்க்கதரிசிகளுக்கும் தீர்க்கதரிசனத்துக்கும் கீழ்ப்படிந்து இயேசு கிறிஸ்துவின் சரீரமாக நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். கர்த்தருக்காக ஒன்று சேருவோம். மகா பெரிய சேனையான நம்மை ஒப்புக் கொடுத்து இனி ஊழியக்காரர்களாகவும் ஊழியக்காரிகளாகவும் செயல்படுவோம். தேவனோடு பெரியர்களும் சிறியவர்களும் சேர்ந்து செயல்படுவோம். உலர்ந்த எலும்புகளைப் போல இருக்கிற நாம் **வைக்கப்பட்ட இடத்தில்** கிடக்கிற நம்மை தீர்க்கதரிசிகளின் மூலம் சொல்லப்படும் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, எலும்புகள் சேர்ந்தது போல சேர வேண்டும். நரம்புகளாக ஐக்கியப்பட்டு, மாம்சமாகிய தேவனுடைய ஊழியர்களின் புத்திமதியை கேட்போம். தேவனுடைய புத்திமதியை உண்மையான அப்போஸ்தலர் மூலம் கேட்போம். அன்பாகிய தோலினால் மூடப்படுவோம். **நீதிமொழிகள் 20:27ன்படி,** மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; **சங்கீதம் 119:105ன்படி,** உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமாயிருக்கிறது என்ற வசனங்களின்படி, வசனத்தினாலும் தேவ ஆவியினாலும் நிரப்பப்பட்டு செயல்படுவோம். **1 கொரிந்தியர் 12:12ன்படி,** இயேசு கிறிஸ்துவின் சரீரமாக ஒன்று சேர்வோம். சபையாகி ஊழியமாகி செயல்படுவோம். **வைக்கப்பட்ட** இடத்தில் மகா சேனையாக

இசைந்து செயல்படுவோம். நிச்சயம் வெறுக்கும் தேவையில்லாத வேதனைகள் நீங்கி போகும்; தேவையான நன்மையான எல்லா ஆசீர்வாதங்களாகிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்,ஆத்மீக ஆசீர்வாதங்கள், சரீர ஆசீர்வாதங்கள், குடும்ப ஆசீர்வாதங்கள், சபையில் ஆசீர்வாதங்கள், ஊழியங்களில் ஆசீர்வாதங்கள், கையின் பிரயாசங்களில் ஆசீர்வாதங்கள், நாட்டில் ஆசீர்வாதங்கள், தேசத்தில் ஆசீர்வாதங்கள், பூமியின் ஆசீர்வாதங்கள் சங்கீதம் 67ன்படி கிடைக்கும். சங்கீதம் 67ன்படி கர்த்தர் நம்மை நடத்தி உயர்த்துவாராக.

## அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் நிரம்பின தேவ சேனையாவோம்

**அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். 2இராஜாக்கள் 6:17**

கர்த்தருடைய பிள்ளைகளைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் நிரம்பின தேவ சேனை எப்பொழுதும் இருக்கும் என்று விசுவாசிக்க வேண்டும். இதைக் காண நமது மனக்கண் திறக்கப்பட வேண்டும். **சங்கீதம் 34:1-7 வரை** படியுங்கள். கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்; துதிப்போம்; கர்த்தருக்குள் நம் ஆத்துமா மேன்மை பாராட்டட்டும். சிறுமைப்பட்டவர்களை மகிழப்பண்ணுவோம். நம்மோடு கூட கர்த்தரை மகிமைப்படுத்த அவர் நாமத்தை உயர்த்த ஆத்தும ஆதாயம் செய் வோம். கர்த்தருக்கு பயந்து செயல்படுவோம். சேவை செய்வோம். தேவ தூதர்கள் நம்மை சூழ பாளயம் இறங்கி நம்மை விடுவிப்பார்கள். எலிசாவைப் போல இரட்டிப்பான வரங்களைப் பெற்ற தேவ பிள்ளைகளோடு ஐக்கியப்பட்டு வருங்காலத்தில் **நீதிமொழிகள் 22:29ன்படி**, நம்முடைய வேலைகளில், நம்முடைய பொறுப்புகளில், நம்முடைய வீட்டில், சபையில், படிப்பில், உத்யோகத்தில் ஜாக்கிரதையாக இருப்போம்.செயல்படுவோம். நீசர்களாகிய வேலை

செய்யாமல் பொறுப்பில்லாமல் இருக்கிற மக்களோடு நிற்க மாட்டோம். ராஜாக்களாக உயர்த்தப்பட்ட தேவ ஜனங்களோடு முன் பாக செயல்பட்டு நாமும் **வைக்கப்பட்டு** ஆசீர்வதிக்கப்படு வோம்; எல்லாருக்கும் ஆசீர்வாதமாக **வைக்கப்பட்டிருப்போம்.**

## <u>பறந்து காக்கிற பட்சியைப் போல சேனையின் கர்த்தர் நமக்கு ஆதரவாயிருப்பார்</u>

**பறந்து காக்கிற பட்சிகளைப் போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துக் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார்.**

**ஏசாயா 31:5**

சேனைகளின் கர்த்தர் பறந்து காக்கிற பட்சிகளைப் போல காத்து நமக்கு ஆதரவாக இருக்க அவருடைய சேனைகளாக உண்மையான சபைகளோடு ஐக்கியப்பட்டு தீவிரமாக விரைந்து செயல்படுவோம். நாம் எதைச் செய்தாலும் ஜெபத்தோடு ஞானத்தோடும் புத்தியோடும் விவேகமாக அதி சீக்கிரமாக சிறப்பாக செய்வோம். நம்மை முழுமையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து காக்கப்படுவோம். பட்சிகள் தங்களுடைய செட்டிகளின் கீழே அனலாக்கிறதை போல **ரோமர் 12:11ன்படி,** அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருப்போம்; ஆவியில் அனலாயிருப்போம்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்வோம்; நம்பிக்கையிலே சந்தோஷமாயிருப்போம்; உபத்திரவத்திலே பொறுமையாயிருப்போம்; ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம்; பரிசுத்தவான்களின் குறைவில் உதவி செய்வோம்; அந்நியரை உபசரிக்க நாடுவோம்; பிரயாசப்படுவோம். **ரோமர் 12:18ன்படி,** நம்மால் ஆனமட்டும் எல்லாம மனுஷரோடும் சமாதானமாயிருப்போம்; அன்றியும் சத்துரு பசியாயிருந்தால் போஜனம் கொடுப்போம்; தாகமாயிருந்தால் பானம்(தண்ணீர்) கொடுப்போம்; அப்படி செய்து சத்துருவின் தலையிலே அக்னி தழலை குவிப்போம். தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினால் வெல்லப்படுவோம். கர்த்தரிடத்தில் நன்மைகளை பெறுவோம். வைக்கப்பட்ட இடத்தில் எல்லாருக்கும் நன்மைகளைச் செய்வோம். வேதனைகள் நீங்கி செழிப்போடு

மேன்மையடைவோம். **ஏசாயா 65:18ன்படி,** நாம் களிகூருவோம்; நாம் மகிழ்ச்சியாக கர்த்தரால் சிருஷ்டிக்கப்படுவோம்; அநேகர் மகிழ்ச்சியடைய இனி செயல்படுவோம். **சகரியா 8:3ன்படி,** எப்பொழுதும் ஆலயத்தை முக்கியப்படுத்தி, ஆராதனையில் கலந்து கொள்வோம். சேனைகளுடைய கர்த்தருடைய பரிசுத்த பர்வதமாக சத்தியத்தை முக்கியப்படுத்தி பேர் பெறுவோம்.

## பரம சேனையின் திரள் நம்மை ஆசீர்வதிக்க ஒப்புக் கொடுப்போம்.

**அந்த க்ஷணமே பரம சேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி,**

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனை துதித்தார்கள். லூக்கா 2:13,14**

பரம சேனையின் திரளோடு நாமும் சேர்ந்து தேவனை துதிக்க வேண்டும். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனை துதிக்க வேண்டும். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்தாவியானவருடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என்று **2 கொரிந்தியர் 13:14ன்படி,** சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். **வைக்கப்பட்ட இடத்தில்** பரம சேனையின் திரள் சொன்னது போல நாமும் சொல்லுவோம். செயல்படுவோம். பூமியிலே சமாதானம் ஏற்பட ஜெபிப்போம்; ஐக்கியப்படுவோம்; செயல்படுவோம். மனுஷர் மேல் நமக்கு பிரியமுண்டாகி உதவிகளைச் செய்வோம். எல்லா மனுஷரும் ஒரு மனுஷர் மேல் இன்னொரு மனுஷர் பிரியமாயிருக்க ஜெபிப்போம்; போய் பேசுவோம்; தேவனுடைய ராஜ்யம் என்ற முத்தை பன்றி புத்தியுள்ளவர்களிடம் சொல்லி பிரயோஜனமில்லை. சொஸ்த (தெளிந்த) புத்தியுள்ளவர்களிடம் சொல்லுவோம். இந்த அனுபவம் நம்மில் ஏற்பட இயேசு கிறிஸ்து நம்மில் பிறக்க ஒப்புக் கொடுப்போம்; **வெளிப்படுத்தினவிசேஷம் 5:9,10ன்படி** பூமியிலே அரசாளுவோம். **1 கொரிந்தியர் 6ன்படி** பரிசுத்தவான்களாவோம்;

உலகத்தை நியாயம் தீர்க்கும் கிருபையைப் பெறுவோம். தேவ தூதர்களையும் நியாயம் தீர்ப்போம் என்ற அறிவை பெறுவோம். **1 கொரிந்தியர் 5:6ன்படி**, கர்த்தருடைய பிள்ளைகளோடு எதைக் குறித்தும் வழக்காடாமல், **1 கொரிந்தியர் 6:9,10ல்** உள்ள பாவங்களை விட்டு விலகுவோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், நம்முடைய தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்படுவோம். நீதிமான்களாக்கப்படுவோம். **நீதிமொழிகள் 10:11,12** அதிகாரத்திலுள்ள எல்லா ஆசீர்வாத நன்மைகளினால் நிரப்பப்படுவோம். வேதத்தில் எழுதி **வைக்கப்பட்டு** இப்பொழுது ஆத்துமநேசரில் எழுதி **வை**க்கப்பட்டிருக்கிற அனுபவங்கள் நமக்கு ஏற்பட மறுபடி மறுபடியும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்போம்; பரிசுத்த ஆவியானவருக்கு அர்ப்பணிப்போம்; ஜெபிப்போம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கர்த்தரை துதிக்கிறேன் என்று சொல்லி முழக்கமிடுவோம். மகா பெரிய சேனையாக, மகா பெரிய அளவில் செயல்பட்டு, மகா பெரிய நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் செழிப்பையும், கனத்தையும், உயர்வையும் பெற்று வாழ்வோம். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஜெபிப்போம்.

## ஜெபம்

**எங்கள் அன்பின் கர்த்தாவே, இந்த நல்ல வேளைக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் சர்வ சேனையாக மாற உமக்கு பிரியமான செய்து உமக்கு பணிவிடை செய்ய எங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்கிறோம். சொல்லப்பட்ட அனுபவங்களை எங்களுக்கு இப்போதே தாரும். இந்த நிமிஷத்திலே தாரும் என்று சொல்லி ஜெபிக்கிறோம். எங்களுக்கு இரங்கி உதவி செய்யும். எப்படியாவது இந்த அனுபவங்களைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.**

**<u>சாட்சிகள்</u>**

**1. கடந்த வாரம் திடீரென என்னுடைய இடது காதில் இரைச்சல் சத்தம் போல் கேட்க தொடங்கியது.** *அதனால் நான் மிகுந்த மன உழைச்சலுக்கு சென்றேன். மருத்துவரை சந்தித்தேன். அவர் ஒரு வாரம் மருந்து மாத்திரை சாப்பிடவும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஒரு வாரம் கடந்தும் சரியாகவில்லை. அப்பொழுது நான் ஆத்துமநேசர் சபையில் ஜெப எண்ணெய் வாங்கினேன். விசுவாசத்தோடு பயன்படுத்தினேன். இப்பொழுது சுகம் பெற்றேன். சுகம் தந்த கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்.*

**<u>ஹரி ஜோஸ்வா, தஞ்சாவூர்.</u>**

**<u>2. எனக்கு சரீரம் முழுவதும் ஊரல் இருந்தது.</u>**
*இரண்டு வருடங்களாக கஷ்டப்பட்டேன். மருந்து மாத்திரைகள் எடுத்தும் சரியாகவில்லை. பாஸடர் ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ஆத்துமநேசர் புத்தகத்தில் சாட்சி எழுதுவதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். சுகம் கிடைத்தது. சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

**செல்வி, அரசன்குடி, நாகர்கோவில்.**

**3. எனக்கு காலில் வீக்கம் வந்து கால் நடக்க முடியாத அளவிற்கு புண் இருந்தது.** *ஏதோ ஒரு விஷ பூச்சி கடித்திருந்தது. கர்த்தரிடம் ஜெபம் செய்து ஜெப எண்ணெய் வைத்து இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று செல்லி காலில் தடவி வந்தவுடன் வீக்கம் குறைந்து புண் ஆறியது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.*

**மீகா எஸ்தர் ராணி.**

**4. கடந்த மாதம் அமாவாசை கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்.** *அக்கூட்டத்தில் என் வட்டி கடன் தீர வேண்டும், என் மூத்த மகளுக்கு கல்லூரி பீஸ் முழுமையாக கட்டி முடிக்க வேண்டும் என்று ஜெபித்து விட்டு வந்தேன். என்னுடைய ஜெபத்தை கேட்டு என் தேவன் அந்த இரண்டு காரியங்களையும் நடத்தி கொடுத்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.*

**புவனேஸ்வரி, திருநாட்டியத்தான்குடி, திருவாரூர்.**

**5. கடந்த நான்கு மாதங்களாக என்னுடைய இடது கால் வீங்கிக் கொண்டு வலித்தது.** *அநேக முறை ஆஸ்பத்திரிக்கு சென்றும் குணமாகவில்லை. என்னை பார்த்து இயேசு இயேசு என்று போறாயே அந்த இயேசு குணமாக்க வேண்டியது தானே என்று கேலி செய்தார்கள். நான் சபைக்கு வந்து கண்ணீரோடு வேண்டிக் கொண்டேன் ஐயாவும் என் தலையில் கை வைத்து ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு பூரண சுகத்தை கொடுத்து நடந்து ஆலயத்திற்கு வரும்படியான கிருபையை கொடுத்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.*

**ரெத்தினமேரி, முருக்கங்குடி.**

**6. எனது மாமா பையனுக்கு திடீரென்று இருதய அடைப்பு ஏற்பட்டது.** *மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்த போது மருத்துவர் உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். ஊழியர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தேன். அவர்களும் ஜெபித்தார்கள். நாங்களும் ஜெபித்தோம். ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் எந்த தீங்கும் வராதபடிக்கு பாதுகாத்த கர்த்தருக்கு ஸ்தோத்தரம்.*

**கேபிரியல் ஜான்ராஜா, செங்கிப்பட்டி.**

**7. எனக்கு அடிக்கடி நெஞ்சுவலி வந்து கொண்டே இருந்தது.** *ஒரு சமயம் இடது பக்கமும் வலிக்கும். நெஞ்சுவலியிலிருந்து பூரண விடுதலை தாங்கப்பா சாட்சி எழுதி கொடுக்கிறேன் என்று ஜெபித்தேன். என் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் பூரண சுகத்தை கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

**சாராள், தஞ்சாவூர்.**

**8. என் தகப்பனாருக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு ஸ்ட்ரோக் வந்தது.** *மிகவும் கவலையடைந்தோம். நான் எனது அப்பாவிற்காக ஜெபித்தேன். ஜெபத்தை கேட்டு அப்பாவுக்கு ஜீவனைக் கொடுத்து பாதுகாத்துக் கொண்டார். இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.*

**சிவசங்கரி, அம்மாபேட்டை.**

**<u>சிறுவர் பகுதி</u>**

**அன்பான தேவனுடைய பிள்ளைகளே! எல்லோரும் எப்படி இருக்கீங்க? பள்ளிக்கூடம் ஆரம்பித்துவிட்டதா? தினமும் காலையில் எழுந்து ஆண்டவரிடம் ஞானம்அ றிவு தேவ தயவு கேளுங்க. தினமும் அப்பா அம்மா அண்ணன் அக்கா தம்பி தங்கச்சி கூட சேர்ந்து ஜெபிங்க.**

*இன்றைக்கு நாம ஏஞ்சல் என்ற அக்காவைப் பற்றிதான் பார்க்க போகிறோம். அந்த அக்கா ஒன்பதாம் வகுப்பு முடித்து பத்தாம் வகுப்புக்கு போகிறார்கள். தினமும் காலையில் ஜெபித்துவிட்டு தனது தந்தையுடன் காரில் பள்ளிக்கூடம் செல்வாங்க. அப்பா ஏஞ்சல் அக்காவை பள்ளியில் விட்டுட்டு அவங்களோட வேலைக்கு சென்றுவிடுவார். சில நாட்கள் ஏஞ்சல் அக்கா 10ம் வகுப்பு பயில்வதால் பள்ளிக்கூடம் சீக்கிரமாகவே ஆரம்பித்துவிடும். அந்த நேரமெல்லாம் ஏஞ்சல் அக்காவின் அப்பா நேரம்படவே செல்வார். இவற்றையெல்லாம் கவனித்து கொண்டிருந்த ஏஞ்சல் அக்காவிற்கு மிகவும் கவலையாகிவிட்டது. எனவே தனது அம்மாவிடம் ஏஞ்சல் அக்கா தனக்கு ஒரு சைக்கில் வாங்கி தருமாறும் அவற்றில் பள்ளிக்கூடம் இனி செல்வதாகவும் கூறினார். அக்கா அம்மாவிடம் சொன்னதை கேட்டு சைக்கில் வாங்கித்தர அப்பா ஒத்துக்கொண்டார். அப்பாவோ ஜெபி ஆண்டவர் உன் தேவையை சந்திப்பார் என்று கூறிவிட்டார். ஏஞ்சல் அக்காவின் முகத்தில் ஒரு பெரிய ஏமாற்றம். அழுகையோடு அம்மாவை அரவணைத்தாள். அப்பாவின் பேச்சிற்கு மறுப்பு தெரிவிக்க முடியாமல் அம்மாவும் ஏஞ்சல் அக்கவை ஆண்டவரிடம் கேட்க சொன்னார்கள். அம்மாவும் ஏஞ்சல் அக்காவும் ஜெபித்தார்கள். அன்று இரவு குடும்ப ஜெபத்தில் அப்பா, அம்மா மற்றும் ஏஞ்சல் மூவரும் சேர்ந்து ஜெபித்தார்கள். அவர்கள் தேவைக்காக இரண்டு வாரம் ஜெபித்தார்கள்.* **மத்தேயு 18:20ன்படி ஏனெனில் இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** *என்று கர்த்தர் சொன்னது போல அவர்களும் கூடி ஜெபித்தார்கள். சில நாட்கள் கழித்து ஏஞ்சல் அக்காவின் மாமா ஒரு சைக்கிளை கொண்டுவந்து கொடுத்தார். அவரிடம் எப்படி இந்த சைக்கிளை கொண்டு வந்தீர்கள் என்று கேட்டதற்கு, வெகு நாட்களாக தான் பயன்படுத்தாமல் இந்த சைக்கிளை வைத்திருப்பதாகவும் உங்களுக்கு தேவைப்படுமோ என்று எண்ணி கொண்டு வந்ததாக கூறினார். ஏஞ்சல் அக்காவிற்கு மிகுந்த ஆச்சர்யம். ஆண்டவர் தன் மாமாவின் மனதில் பேசியதை எண்ணி ஆச்சரியப்பட்டாள்.*

**மத்தேயு 7:7ன்படி கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்... என்ற தேவனுடைய வாக்கின்படி ஏஞ்சல் அக்காவிற்கு இந்த சைக்கிள் கிடைக்க கிருபை செய்தார்.**

*அதுபோல நாமும் நம்முடைய தேவைகளை இயேசப்பாவிடம் சொல்ல வேண்டும். தேவன் அதை நமக்கு செய்வார். நம்மை ஆசீர்வதிப்பாராக.* **ஆமென்.**

## <u>பெண்கள் பகுதி</u>

### வெளிச்சம்

**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மத்தேயு 5:14**

**ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் இந்த இருள் நிறைந்த உலகத்திலே ஒரு தீபமாக இருக்கிறான்.**

*ஏனென்றால்,* **நீதிமொழிகள் 20:27ன்படி மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது.** *ஆனாலும் நாம் மறுபடியும் பிறவாத நிலையில் பற்றிஎரிந்து பிரகாசிக்க முடியாத நிலையிலிருக்கிறது. தேவனாகிய கர்த்தர் மனுஷனை தமது சாயலாகவும் தமது ரூபமாகவும் சிருஷ்டித்தார் என்று நாம் அறிந்திருக்கிறோம். கீழ்ப்படியாமையாகிய பாவம் நம்மை மேற்கொண்டபோதோ அந்த தீபம் புகைத்துக் கொண்டிருக்கிற மங்கியெரிகிற திரியாக அணைந்து போயிற்று. அணைந்து போன தீபங்கள் ஆயிரமாக இருந்தாலும் இடம் வெளிச்சமாகாது. இருதயமானது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் போது பரிசுத்த ஆவியானவர் பரலோக அக்கினி பிரகாசத்தினால் தொட்டு மறுபடியும் எரியச் செய்கிறார். அதினால் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்கென்று பிரகாசிக்கிற விளக்காக மாறுகிறான்.*

*நாம் நாமாக பிரகாசிக்க முடியாது. கிறிஸ்துவின் ஜீவன் நம்மை மறுபடியும் பற்ற வைத்து எரிய வைத்த பின்பு தான் நாம் உலகத்துக்கு வெளிச்சமாக பிரகாசிக்க முடியும் என்ற உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். மறுபடியும் எரிய ஆரம்பித்த திரி அணைந்து போகாதபடிக்கு அதை சீராக்கி தூண்டிவிட்டுக் கொண்டேயிருக்க எண்ணெயாகிய ஐக்கியத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் வாழுமிடத்தில் தேவ அன்பினாலும் தேவ கிருபையினாலும் நம்மிலிருந்து நற்கிரியைகளாகிய வெளிச்சம் எழும்பி அருகிலுள்ளவர்களும் சந்தோஷமாக நல்வாழ்வு வாழ விளக்குகளாக பிரகாசிக்க வேண்டும். கடலோரப் பகுதிகளில் கலங்கரை விளக்கு சமுத்திரத்தின் கடையாந்திர மட்டும் பிரகாசிக்கிறது, ஆனாலும் தன்னைச் சுற்றிலும் அதினால் வெளிச்சம் கொடுக்க முடியாது. அதுபோல அநேகர் வெகுதூரத்தில் இருளிலிருக்கும் ஜனங்களுக்கு நன்மை செய்கிறவர்களாய் உலகம் பயனடையச் செய்து, தம் அருகிலிருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சமாயிராமல் போய்விடுகிறார்கள். நாம் அப்படியிராமல் பூமியின் கடைசி பரியந்தமும் கர்த்தருக்கு சாட்சிகளாக வாழ, நம்மைச் சூழ்ந்திருக்கிற எல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாக வெளிச்சத்தில் நடக்க கர்த்தர் கரத்தில் அவர் சித்தத்திற்குள்ளாக மறைந்துக் கொள்வோம்.*

**தேவன் தாமே நம்மை கிறிஸ்துவின் நிறைவான வெளிச்சத்தின் பாதையில் நடத்துவாராக. அல்லேலூயா, ஆமென்.**

# பரிசுத்த பர்வதம்

**கட்டுகள் அறுக்கும் ஜெபம் மற்றும் விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம்**
**ஆகிய இந்த இரண்டு கூட்டங்களையும் இணையதளத்தில் காணலாம்**

***Youtube-*ல் காண விரும்புகிறவர்கள்**

***PARISUTHA PARVATHAM***

(or)

***LOVER OF SOULS GOSPEL***

## விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம்

**இந்த மாதம் 21 -ம் தேதி (ஜுன்)**
**மூன்றாவது சனிக்கிழமை**
**காலை 10.00 மணி – 1.00 வரை**

**வறுமை நீங்கி ஆசீர்வாதம் பெற**
**பாவம், சாபம், வியாதி, பில்லிசூனியம், செய்வினை, ஏவல் நீங்க**
**குடும்பத்தின் அனைத்து பிரச்சனைகள் மாற வாருங்கள்**

**தேவசெய்தி:**

அப்போஸ்தலர் **Đ ஆசீர்வாதம்**

சகோ. **ஜேசன் ஆசீர்வாதம்**

## கட்டுகள் அறுக்கும் ஜெபம்

**இந்த மாதம் 24-ம் தேதி செவ்வாய்கிழமை (ஜுன்)**
**அமாவாசை** தினத்தன்று
இரவு 10.00 மணி – 2.00 மணி வரை

**பில்லிசூனியம், செய்வினை, ஏவல் பிசாசின்**
**கட்டுகள் உடைய வாருங்கள்**

பரிசுத்த பர்வதம், சாஸ்திரா பல்கலைக்கழகம் எதிரில்,
தஞ்சை – திருச்சி மெயின் ரோடு, தஞ்சாவூர்.
**தொடர்புக்கு : 83000 00293**

## அன்பார்ந்த ஆத்துமநேசர் நமது இயேசு பத்திரிக்கையின் வாசகர்களுக்கு ஓர் அன்பின் வேண்டுகோள்!!!

இப்பத்திரிக்கையின் ஒவ்வொரு பக்கமும் தேவனுடைய வல்லமையால் நிரம்பி இருக்கிறது. இப்பத்திரிக்கையை வைத்து விசுவாசித்து ஜெபிக்கும்போது அநேக நன்மைகளை பெற்றுக் கொண்டவர்கள் அநேகர். இப்பத்திரிக்கை தங்கு தடையின்றி வெளி வருவதற்கு வாசகர்களாகிய உங்களது ஜெபமும் உதாரத்துவமான காணிக்கையும் தேவைப்படுகிறது. ஆகவே தங்களால் இயன்ற காணிக்கையை கீழே கண்டுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கி கணக்கில் காசோலை/வரைவோலை ஆகவோ செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கி அதற்குரிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்கள் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆத்துமநேசர் நமது இயேசு பத்திரிக்கைக்கு
சந்தா மற்றும் நன்கொடை செலுத்துபவர்களின் அன்பான கவனத்திற்கு

| | |
|---|---|
| **BANK** | **: STATE BANK OF INDIA** |
| **BRANCH** | **: THANJAVUR MAIN** |
| **ACCOUNT NAME** | **: ATHUMANESAR NAMATHU YESU** |
| **ACCOUNT NO.** | **: CURRENT A/C NO:32870102469** |
| **IFSC CODE** | **: SBIN0000924** |
| **MICR CODE** | **: 613002002** |
| **CBS CODE** | **: 0924** |
| **SWIFT CODE** | **: SBININ BB 464** |

**NET BANKING** மூலமும் அனுப்பலாம்

**DD & CHEQUE** (காசோலை) **& MONEY ORDER** மூலமும் அனுப்பலாம்

அனுப்பவேண்டிய முகவரி: பாஸ்டர் **D.** ஆசீர்வாதம், 17, மாணிக்கம் நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர் - 613007.

**காசோலை மூலம் சந்தா செலுத்துபவர்கள் அதற்கான விவரங்களை மின்னஞ்சல் முகவரியில் தெரியப்படுத்தவும்**

**E.mail: athumanesarnamathuyesu@gmail.com**

***For Contact*:- Pastor. Jims Asirvatham - +919965114141**

## தஞ்சாவூர் ஆத்துமநேசர் தலைமை சபையின் ஆராதனை ஒழுங்குகள்

தினந்தோறும் காலை ஜெபம் : 5.00 மணி – 7.30 மணி
வேத வாசிப்பு : காலை 5.00 – 6.00 மணி
பாடல் வேளை : காலை 6.00 மணி – 6.30 மணி
காலை தேவசெய்தி : காலை 6.30 மணி – 7.30 மணி

சகோதரர்கள் கூட்டம்
ஒவ்வொரு
புதன் கிழமை
இரவு
7.00 – 8.00 வரை

சகோதரிகள் கூட்டம்
ஒவ்வொரு
வியாழக்கிழமை
இரவு
7.00 – 8.00 வரை

ஞாயிற்றுகிழமை ஆராதனைகள்
காலை 6.00 – 7.30 வரை முதல் ஆராதனை
காலை 8.30 – 10.30 வரை 2ம் ஆராதனை
காலை 10.30 – 1.30 வரை 3ம் ஆராதனை
முதல் ஞாயிறு – திருவிருந்து ஆராதனை
அனைத்து ஆராதனைகளிலும்

மூப்பர்கள் கூட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமையும்
இரவு
7.00 – 8.00 வரை

முதல் செவ்வாய்க்கிழமை
ஊழியர்கள் கூட்டம் – தலைமை சபை, தஞ்சாவூர் காலை 10.00 மணி – 1.30 மணி
சுவிசேஷக்கூட்டம் – பரிசுத்த பர்வதம், தஞ்சாவூர் பிற்பகல் 3.00 மணி – 5.00 மணி

முதல் வெள்ளிக்கிழமை
இரவு விழிப்பு ஜெபம் – இரவு 10 மணி – 2 மணி

வெள்ளிக்கிழமை உபவாச ஜெபம்
காலை 10.00 மணி – 1.30 மணி

முதல் சனிக்கிழமை
ஏழைகளுக்கு உதவி செய்யும் கூட்டம் காலை 10 மணி – 12.30 மணி
திருவிருந்து ஆராதனை இரவு 7 மணி – 8.30 மணி

விடுதலையின் ஆசீர்வாதக் கூட்டம் – பரிசுத்த பர்வதம்
மாதத்தின் 3வது சனிக்கிழமை
காலை 10.00 மணி – 1.00 மணி

கட்டுகள் அறுக்கும் ஜெபம் – பரிசுத்த பர்வதம்
மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று
இரவு 10.00 மணி – அதிகாலை 2.00 மணி

இந்த இரு கூட்டங்களையும்
*Parisutha Parvatham*
(பரிசுத்த பர்வதம்) என்ற
யூடியுப் சேனலில் காணலாம்

*Facebook* (ஃபேஸ்புக்)–ல் காண விரும்புகிறவர்கள்
அருகிலுள்ள **Barcode**–ஐ ஸ்கேன் செய்து பார்க்கலாம்

*Youtube* (யூடியுப்)–ல் காண விரும்புகிறவர்கள்
அருகிலுள்ள **Barcode**–ஐ ஸ்கேன் செய்து பார்க்கலாம்
கேட்டு ஆசீர்வாதம் பெறுங்கள்.
ஞாயிறு ஆராதனை மற்றும் செவ்வாய் சுவிசேஷக்கூட்டம்
மற்றும் அனைத்து ஜெபங்களிலும் ஆலயத்திற்கு வந்து
கலந்து கொள்ளலாம்.
இணையதலத்தில்
*Athumanesar India* என்னும் *Channel*–ல் காணலாம்.

SUBSCRIBE-LIKE-SHARE – பண்ணுங்கள்




**DATE OF PUBLICATION : 05.06.2025**

**Registered News Paper Regn. RNI.No. TNTAM/2012/46679**

**Registered No. SSP/TJ/33/2025-27 Licensed to post without pre-payment**

**WPP License No. TN/PMG (CR)/WPP/03/2025-27 (Valid upto 31.12.2027)**

**Owned, Printed & Published By D.ASIRVATHAM**

**Published & Printed at: Athumanesar Offset Printers, 17, Manickam Nagar, Thanjavur - 613007, Tamilnadu. Editor: D.ASIRVATHAM**



**If Undelivered return request to:**

**Apostle. D. ASIRVATHAM**
**Athumanesar Ministries,**
**17, Manickam Nagar, M.C. Road,**
**Thanjavur - 613007, TN, INDIA.**
**PH: 9994301076, 8300000293**



Posted @ Thanjavur R.M.S on 5th of Every Month